1993 ஏப்ரல் 21

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. வெ. தமிழரசு.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோலார் எனெர்ஜி தெருவிளக்குகள் எனது ஆத்தூர் தொகுதியில் சின்னகல்ராயன்மலையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. அதற்காக நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மலைவாழ் மக்கள் கிராமங்களான அடுத்தடுத்த கிராமங்களுக்கும் எனது தொகுதியில் இது வழங்கப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 419. திரு. கே. செல்வராஜ் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே. பி. ராஜு, கேட்கிறார். மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

419——

மானியக் கடனில் தனியார் இறால் மீன் வளர்த்து வியாபாரம் செய்ய உதவித் தொகை.

*11282—திரு. கே. செல்வராஜ்:
மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானியக் கடனில் தனியார் இறால் மீன் வளர்த்து வியாபார முறையில் செயல்பட அரசு உதவுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை அரசு அளிக்கிறது?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 30,000 உச்சமானியமாக வழங்கப்படுகிறது.

1993 ஏப்ரல் 21

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெக்டேர் ஒன்றுக்கு இரால் வளர்ப்பதற்காக ரூபாய் 30,000 மானியமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த இரால்களை எல்லாம் இந்தக் கடலோர பகுதியில் வளர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே இரால் வளர்ப்பை கடல் இல்லாத மற்ற பகுதிகளிலும் வளர்த்தால் அதற்கு மானியம் வழங்கப்படுமா? அப்படி கடல் இல்லாத பகுதிகளில் இரால் வளர்க்கிற தொழிலுக்கு ஊக்கம் அளிக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரைப் பகுதிகளிலே இரால் வளர்ப்பதற்கு அதிகமான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் உள்நாட்டு நீர்நிலைகளைப் பொறுத்தமட்டில் 'மதர் புருடன்' என்று சொல்கிற தாய் இரால் அதிகமான அளவுக்குக் கிடைப்பதில்லை. அதைக் கருத்தில்கொண்டுதான் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உள்நாட்டு நீர்நிலைகளில் ரோசன்பர்கி என்று சொல்லக்கூடிய அந்த இரால் வகைகளை வளர்ப்பதற்கான முறையை, அந்த வகை இரால் குஞ்சுகளை வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காக, ஒருவரே முன்வந்து அந்த பொரிப்பகம் ஆரம்பித்தால் கூட ரூபாய் 2.5 இலட்சம் மானியமாக வழங்குவதற்கு உத்திரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே முதல்கட்டமாக பொரிப்பகம் அமைக்கப்பட்டு அதன்மூலம் இரால் குஞ்சுகள் தங்குதடையில்லாத வகையிலே கிடைக்கப் பெற்றால் படிப்படியாக உள்நாட்டு நீர்நிலைகளில் ரோசன்பர்கி என்ற வகை இரால் குஞ்சுகள் வளர்ப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதன் அடிப்படையிலே இந்தத் திட்டத்தின் வளர்ச்சியைக் கண்டு, மானியம் வழங்குவதற்கும் இனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 420, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

420—

எலச்சிப்பாளையம் காந்தி ஆசிரமத்திற்கு கைத்தறி விற்பனையில் வழங்கப்படும் ரிபேட் தொகை.

* 10334—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—